17th July 1964]

* 500 கேள்வி.—திரு. பி. முருகையன் : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஆலங்குடியில் உள்ள அரசினர் மருத்துவ விடுதிக்கு கட்டடம் கட்டும் திட்டம் என்ன நிலையில் உள்ளது ?

(இ) அங்கு படுக்கைகளை மேலும் அதிகரிக்கும் நோக்கமுண்டா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) & (இ) மருத்துவ மனைக்கான புதிய கட்டடங்கள் கட்டுவதற்காகத் தேவைப்படும் நிலங்கள் ஆர்ஜிதம் செய்யப்பட்டு வருகின்றன. தேசிய நெருக்கடியை முன்னிட்டு கட்டட வேலையை இப்போது மேற்கொள்ள இயலாது.

* 501 கேள்வி.—திரு. எஸ். ஜே. ராமசாமி : கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

அரக்கோணம் சர்க்கார் மருத்துவமனையை விரிவுபடுத்தும் உத்தேசமுண்டா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : தேசிய நெருக்கடி காரணமாக இந்த மருத்துவமனையை விரிவுபடுத்தும் திட்டம் தள்ளிப்போடப்பட்டுள்ளது.

* 502 Q.—Sri M. WILLIAM : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether there is any proposal to increase the number of beds in the Kuzhithurai Government Hospital in Kanyakumari district during 1964 ;

(b) the number of beds in the hospital at present ; and

(c) whether there is any proposal to shift it from the present location ?

The Hon. Srimathi JOTHI VENCATACHELLUM : (a) The Government have generally approved of the proposal for the construction of a new ward of 32 beds for the hospital. Its bed strength can be increased only after additional accommodation is constructed.

(b) Twenty.

(c) Yes.

திரு. செ. மாதவன் : தலைவர் அவர்களே, அரசாங்கம் புதிய மருத்துவ விடுதிகளைத் தொடங்குவதில் கையாளும் முறைகள் யாவை ? அதற்கு என்னென்ன தகுதிகள் வேண்டும் என்று அரசாங்கம் கருதுகிறது ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : புதிய மருத்துவ மனைகள் கட்டுவதாக இருந்தால் முதலாவதாக நிலம் ஆர்ஜிதம் செய்தாகவேண்டும். ஏற்கனவே இருக்கிற சிறிய கட்டடங்களுக்கு